JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **82/2019** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | லுக்கி | Village | சடையம்பாளையம் ரோடு,ஈரோடு |
| Father’s Name | டிஸ்செல்வா | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 05.08.2025.**

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஜோசப் ரேமோன் மெலோனி எனது உறவினரின் மகன் ஆவார். அவர் கோவை CS கல்லூரியில் வேலை பார்த்து வந்தவர் 18.01.2017 ம் தேதி காலை 5.00 மணிக்கு பொங்கல் விடுமுறை முடிந்து ஈரோட்டில் இருந்து TVS Star city TN 33 BK 4479 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு சென்றபோது விஜயமங்கலம் டோல்கேட்டை தாண்டி வாய்ப்பாடி பிரிவில் காலை 5.45 மணிக்கு ஏதோ ஒரு வாகனம் அவர் மீது மோதி விட்டது என்று காலை 6 மணி சுமாருக்கு விபத்தில் காயம்பட்டவரின் அண்ணன் அ.சா.1 எனக்கு தகவல் கூறியதின் பேரில் நான் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது அவர் இறந்து போயிருந்தார். அவருக்கு தலையிலும், நெற்றிக்கு மேல் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது.

பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்தேன். அவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1) இறந்து போன நபருக்கு நான் உறவினர் என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் மட்டும் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை